# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 173 BNSS)
(BNSS பிரிவு 173 இன் கீழ்)

~~(Under Section 154 Cr.P.C.)~~
~~(குற்ற விசாரணை முறைச் சட்டப் பிரிவு 154 இன் கீழ்)~~

C 8129856

1. District : திருச்சி மாவட்டம் மாவட்டம் P.S: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல்நிலையம் Year: 2024 ஆண்டு FIR No.: 10/2024 மு.த.அ. எண் Date: 02.08.2024 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 (as amended in 2018) Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : 29.07.2024 நாள் முதல் Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : 1600 hrs நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 02.08.2024 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 07.00 hrs நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) - பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : - நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டது

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 15 கி.மீ கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி துவாக்குடி நகராட்சி அலுவலகம், துவாக்குடி, திருச்சி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : - District : -
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : ப.பார்வேல், குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
   (b) Father's/ Husband's Name : பச்சைமுத்து தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 20.11.1963 நாள் / பிறந்த ஆண்டு
   (d) Nationality : இந்தியன் நாட்டினம்
   (e) Passport No. : - வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : கட்டிட கட்டுமான பணி தொழில்
   (g) Address : எண்.1, முருகன் தெரு, டபுள் கிராஸ், சீர்த்தி நகர், கே.கே.நகர் (Post), திருச்சி-21 முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. செளந்திரபாண்டியன், துவாக்குடி நகராட்சி [illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —வாதியால் தாமதம் —

240-3--Pol B FIR Type-2--1046 Bundle--25-2-2022--[HP-39]

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

(Signature) 02/08/24 | (Signature) 02/08/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 02.08.2024 08.00hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் A.பிரசன்ன வெங்கடேஷ்
Rank: நிலை காவல் ஆய்வாளர், No. ......
உணவுப் பொருள் மற்றும் கண்காணிப்பு பிரிவு,
திருச்சி.

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2024–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 02.08.2024 பணியில் இருந்த போது காலை 07.00 மணியளவில் திருச்சி, கே.கே.நகர், சுந்தர் நகர், 6வது கிராஸ் எண்.1 முருகன் தெரு என்ற முகவரியில் வசித்து வரும் பச்சை முத்து மகன் திரு.ப.பாரிவேள், என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை செய்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி, துவாக்குடி நகராட்சி கிளார்க் திரு.சௌந்தரபாண்டியன் மற்றும் புகார்தாரர் திரு.பாரிவேள் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்யப்பட்டது. இன்று 02.08.2024 காலை 08.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.10/2024 சட்டப்பிரிவு 7 ஊழல் தடுப்பு சட்டம் 1988 (as amended in 2018)-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. அனுப்புனர் ப.பாரிவேள், வயது 60, த/பெ.பச்சைமுத்து, எண்.1, முருகன் தெரு, 6-வது கிராஸ், சுந்தர் நகர், கே.கே.நகர் (Post), திருச்சி-21. பெறுநர் காவல்துறை ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி மாவட்ட அலுவலகம், திருச்சி. ஐயா, நான் திருச்சி கே.கே.நகர், சுந்தர்நகரில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் என்ஜினியரிங் படித்துவிட்டு, வெளிநாட்டில் கட்டுமானத்தொழிலில் மேற்பார்வையாளராக பணியாற்றினேன். தற்போது திருச்சி மாவட்டத்தில் காலிமனைகளை வாங்கி அதில் வீடு கட்டி விற்பனை செய்து தொழில் நடத்தி வருகிறேன். கடந்த ஜுன் மாதத்தில் துவாக்குடி நகராட்சி எல்லைக்கு உட்பட்ட ஜெர்மியா கார்டன் என்று பெயரிடப்பட்டு தற்போது அபிராமபுரம் என்ற இடத்தில் அமைந்துள்ள 1205½ சதுர அடி பரப்புள்ள பிளாட் எண்.66 என்ற காலிமனையினை எனது பெயருக்கு வாங்கியிருந்தேன். அந்த காலிமனையில் வீடுகட்டி விற்பனை செய்யலாம் என எண்ணி, அதற்கான முதல் வேலையாக அந்த காலிமனைக்கு வரி நிர்ணயம் செய்து தர கோரி திருச்சி துவாக்குடி நகராட்சி அலுவலகத்தில் சம்மந்தப்பட்ட கிளார்க் திரு.சௌந்திரபாண்டியன் என்பவரை சுமார் 15 நாட்களுக்கு முன் சந்தித்து அவரிடம் எனது விண்ணபித்தை கொடுத்தேன். எனது விண்ணபத்தினை பெற்றுக்கொண்ட அவர் அங்கிருந்த பதிவேட்டில் பதிவு செய்துவிட்டு 15 நாள்

கழித்து வந்து என்னை பாருங்கள் என்று கூறினார். அதன் பேரில் நான் கடந்த 29.7.2024 அன்று மாலை சுமார் 4 மணியளவில் துவாக்குடி நகராட்சி அலுவலகத்திற்கு சென்று அந்த அலுவலகத்தின் தரை தளத்தில் பணியில் இருந்த கிளார்க் திரு.சௌந்திரபாண்டியனை சந்தித்து என்னுடைய விண்ணப்பத்தின் நிலை குறித்து கேட்டேன். அதற்கு அவர், உங்க பிளாட்டுக்கு டேக்ஸ் போடனும்னா நாங்க நிறைய டேக்ஸ் போட வேண்டி வரும் அந்த அமௌன்ட் தனி. அதுமட்டுமில்லாம ஒரு பிளாட்டுக்கு டேக்ஸ் பிக்ஸ் பண்ணணும்னா ஒரு லட்சரூபா தனியா எனக்கு கொடுத்திடனும் என்று கூறினார். அதற்கு நான், சார் இந்த ஏரியாவில இப்பதான் நான் கன்ஷ்ட்ரக்சன் ஆரம்பிச்சிருக்கேன், இனி ரெகுலரா இங்க என் பிசினஸ் நடக்கும். அதனால பாத்து கம்மியா கேளுங்க சார் என்று கூறினேன். அதற்கு அவர், சொந்தமா வீடு கட்டுறவுங்கன்னா ஒரு ரூவா கண்டிப்பா வாங்குவேன், நீங்க ரெகுலரா கன்ஷ்ட்ரக்சன் பண்ணப்போறேன்னு சொல்றீங்க அதனால எனக்கு தனியா 50 ஆயிரம் கொடுத்திடுங்க, டேக்ஸ் பிக்ஸ் பண்ணி உடனே கொடுத்திடுறேன் அதுக்கு தனியா கட்டிடுங்க என்று கூறினார். அதற்கு நான் 50 ஆயிரம் அதிகமா இருக்கு சார் பாத்து குறைச்சி கேளுங்க சார் என்றதற்கு அவர், நீங்க பில்டர்ங்கிறதால தான் இந்த அமௌன்ட் என்று வற்புறுத்தி 50 ஆயிரம் கொடுத்திடுங்க சார் என்று மீண்டும் கூறினார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும் அப்போதைக்கு அவரிடம் சரிங்க சார் நாளைக்கு வருகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர், நாளைக்கு நீங்க வர வேண்டாம், வியாழக்கிழமை வரைக்கும் மினிஸ்டர் புரோகிராம் இருக்கிறதால எனக்கு வெளியில வேல இருக்கும், அதனால வெள்ளிக்கிழமை போன் பண்ணிட்டு வந்து 50 ஆயிரத்த என்னிடம் கொடுங்க உங்களுக்கு உடனே டேக்ஸ் அசெஸ் பண்ணி கொடுத்திடுறேன் என்று கூறினார். நான் சரிங்க சார் பணத்தோட வருகிறேன் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன். எனது பெயரில் உள்ள காலிமனைக்கு டேக்ஸ் அசெஸ் செய்து கொடுப்பதற்காக 50 ஆயிரம் ரூபாய் லஞ்சம் கேட்ட துவாக்குடி நகராட்சி கிளார்க் சௌந்திரபாண்டியன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (P.Parivel) 02.08.2024 Submitted to the Court of the Hon'ble Special Judge, for the trial cases of the PC Act-1988, Trichy. Received this report at 07.00 hrs on 02/08/2024. Made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.10/2024 u/s 7 of the PC Act-1988 (as amended in 2018) at 08.00 hrs on 02/08/2024. Sd.xxx (A.PRASANNA VENKATESH) 02/08/2024 Inspector of Police, V&AC, Trichy.

02/08/2024
[A.Prasanna Venkatesh]
Insp V&AC, Trichy.